## இடைத்தேர்தல் தோல்வி பயத்தில் அவதூறுகளைக் கிளப்பி

# பொய் வழக்கு - கைது நடவடிக்கைகளை செய்து வருகிறது த.வெ.க. அரசு!

### கழக கொள்கை பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் செய்தியாளர்களுக்குப் பேட்டி!

**சென்னை, ஜூலை 5–**

**இடைத்தேர்தல் தோல்வி பயத்தில் அவதூறுகளையும், கைது நடவடிக்கைகளையும் செய்து வருகிறது த.வெ.க. அரசு என கழக கொள்கை பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்துள்ளார். இது தொடர்பாக அவரது பேட்டி வருமாறு:–**



தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு இருப்பதும், மக்களுடையதேவைகள்பூர்த்தியாகாமல் அவதிக்குள்ளாகி வருவதும், மின்வெட்டு பிரச்சினைகள் இருப்பதும், பாலியல் வன்முறைகள், கொலை, கொள்ளை, ஆணவக் கொலைகள் பெருகி இருக்கக்கூடிய சூழல் நிலவுகிறது.

இவ்வளவு மோசமான ஒரு ஆட்சியா என்று மக்கள் எல்லாரும் விமர்சிக்கக்கூடிய அளவிற்கு அளவிற்கு, அரசை எதிர்த்து மக்கள் கேள்வி கேட்கும் சூழல் நிலவி வருவதால் இதையெல்லாம் திசை திருப்புகிற வகையிலே இன்றைக்கு கூட முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அவதூறு வழக்கில் உடனடியாக அவரை கைது செய்து இழுத்துட்டு செல்லும் அளவிற்கு மிக மோசமான ஒரு அணுகுமுறையை நடிகர் ஜோசப் விஜய் முதலமைச்சராய் பொறுப்பேற்றதிலிருந்து நடந்து கொண்டிருக்கிறது. அராஜக ஆட்சியை வைத்து எதிர்க்கட்சிகளை முடக்கிப் போடலாம்எனஅவர்கள்நினைக்கிறார்.

**த.வெ.க. நிர்வாகிகளால் பாலியல் வன்கொடுமை!**

அதே ஸ்ரீ வைகுண்டத்தில் த.வெ.க.வை சார்ந்த ஒரு பெண் த.வெ.க. நிர்வாகிகளால் பாலியல் வன்கொடுமை செய்யப்படுகிறார், குற்றவாளி களுக்கு ஆதரவாக த.வெ.க. எம்.எல்.ஏ. செயல்பட்டு அந்த பெண்ணை மிரட்டுவதாக அவர் புகார் அளித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இவ்வளவு பெரிய புகார் இருந்தும் இதுவரை அந்த எம்.எல்.ஏ. மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால் ஒரு சாதாரணமான விஷயத்திற்கு உடனடியாக முன்னாள் அமைச்சர் கைது என்று சொல்லி பாய்கிறார்கள். அதே போல முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்ய எவ்வளவோ முயற்சி செய்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் இடைத்தேர்தல் தோல்வி பயம் தான். அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களை கைது செய்தா அம்பா சமுத்திரத்தில் வரக்கூடிய இடைத்தேர்தலுக்கு வேலை செய்ய ஆள் இல்லாம செய்திடலாம். செந்தில் பாலாஜி அவர்களை கைது செய்தால் கரூர் மற்றும், பெருந்துறையிலயும் தேர்தல் வேலை செய்யாமல் செய்துடலாம்.

**மணல் கொள்ளைக்கு சதித் திட்டம்!**

இப்படிப்பட்ட ஒரு சதித் திட்டத்தை மட்டுமே செய்து கொண்டிருக்கக்கூடிய வேலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாட்டு மக்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்குப் பதில் சொல்ல தயாரா இல்லை. இப்ப இன்னொரு பெரிய கான்ஸ்பிரசி மாதிரி மணல் கொள்ளைக்கு ஒரு பெரிய திட்டத்தை போட்டிட்டு இருக்காங்க. மணல் கொள்ளையை யாரை வச்சு நடத்தலாம்னு திட்டம் போட்டுக்கொண்டுள்ளனர் என்ற தகவலும் வருகிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு சொல்லியதன் பேரில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அணு கனிமம் சுரங்க காலத்தை நீட்டிப்பு செய்துள்ளனர். இதை பற்றி எல்லாம் கேள்வி கேட்டால் அதை திசை திருப்புதல் மட்டுமே செய்கிறார்கள் எந்தப் பதிலும் அளிப்பது இல்லை.

107 இடங்களில் தான் இவர்கள் வெற்றி பெற்றார்கள். ஆட்சி அமைக்க மெஜாரிட்டி இல்லாததால முதலில் அ.தி.மு.க.வுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அ.தி.மு.க. எம்.எல்.ஏ. லீமா ரோஸ் அ.தி.மு.க. -- த.வெ.க. பேச்சு வார்த்தை நடக்குது என்று சொன்னாங்க. ஆனா அ.தி.மு.க. என்ன டிமாண்ட் வச்சது என தெரியவில்லை.

அ.தி.மு.க. இரு பிரிவா பிரிஞ்சது. அதனால தி.மு.க. கூட்டணியில் வெற்றி பெற்றவர்கள் எல்லாம் அங்கே போய் ஆதரவு கொடுத்து ஆட்சி அமைத்தார்கள். ஆட்சியமைச்ச பிறகு அனைத்து தலைவர்களையும் நேரில் சந்தித்த முதல்வர் ஜோசப் விஜய் அ.தி.மு.க.வின் பிரிவினை குழுவை நேரில் சந்தித்தார்.

குதிரை பேரத்தை முதலில் தொடங்கி வைத்தவர் யார் என்றால் இன்றைய முதலமைச்சர் விஜய் அவர்கள்தான். அவர் சந்திக்கப் போகும் போதெல்லாம் ஒரு 'சோபா' அவருடனே செல்லும், சந்திப்பு முடிந்து வரும் போது ஷோபா அங்கேயே இருக்கும். இது ஒரு மெத்தேடு.

**ஆட்சியை தக்கவைக்க குதிரை பேரம்!**

அவர் பி.ஜே.பி.யுடன் பிரண்ட்ஷிப் ஆனாரு. பி.ஜே.பி. சொன்னாங்க நாங்க ஒரு வாஷிங்மெஷின் கொடுக்கறேன். அந்த வாஷிங்மெஷின கொண்டு போனீங்கன்னா எந்த குற்றம் செஞ்சவங்களையும் அவங்கள எல்லாம் கிளீன் பண்ணிக்கலாம். நீங்க எடுத்திட்டு போய் யூஸ் பண்ணிக்கங்கனு சொல்லி இருக்காங்க . அந்த வாஷிங் மெஷின கொண்டுவந்து , லாட்டரி டிடர்ஜென்ட் போட்டு எல்லோரையும் கிளீன் பண்ணிட்டு இருக்காரு. மோடிய விட இவரு இரண்டு மடங்கா மாறிட்டார். இந்த சோபா மாடலில் அரசு குதிரை பேரம் மூலமாக ஆட்சியை தக்க வைப்பதற்காக பார்த்துக் கொண்டிருக்கிறார். கல்லாபெட்டி கூட்டணி என விமர்சித்து விட்டு இன்று அவர்களை சேர்த்துக்கொண்டு ஷோபா மாடல் ஆட்சி நடத்துகிறார்.

**அ.தி.மு.க.வை அழிக்கிறது ஷோபா மாடல் அரசு!**

ஆதவ் அர்ஜூனா பேசும் போது கூறினார். ஜெயலலிதா அவர்களை கைது செய்தது தி.மு.க. என கூறுகிறார். நீதிமன்ற உத்தரவின் பேரில் தான் அன்று கண்ணியமான முறையில் கைது செய்யப்பட்டார்களே தவிர, இரவில் சென்று கதவை உடைத்தெல்லாம் கைது செய்யப்படவில்லை. 2014 இல் நீதிமன்றம் சென்ற ஜெயலலிதா கைது செய்யப்பட்டார்களே அப்போது யார் ஆட்சி இருந்தது? காங்கிரஸ் ஆட்சி தான் கைது செய்தது என ஆதவ் அர்ஜூனா சொல்வாறா? செங்கோட்டையன் சொல்வாரா? அப்படி ஜெயலலிதா அவர்களை கைது செய்த காங்கிரஸ் உடன் கூட்டணி வைத்துள்ளார்களே அந்தக் கூட்டணியை முறித்துக்கொண்டு போவார்களா? இல்லை ஜெயலலிதா அவர்களை கைது செய்த காங்கிரஸ் உடன் அமைச்சரவையில் இருக்க முடியாது என செங்கோட்டையன் பதவியை ராஜினாமா செய்வாரா? இப்போது அ.தி.மு.க,வை குதிரை பேரம் மூலம் இழுத்து அழிக்க முயற்சித்துக் கொண்டு இருக்கிறது சோபா மாடல் அரசு.

**இடைத்தேர்தல் நாடகம்!**

கரூர் சம்பவத்தில் காவல்துறையை வைத்து கொலை செய்தார்கள் என குற்றம் சாட்டினாரே ஆதவ் அர்ஜூனா, இப்போது காவல்துறை யார் கட்டுப்பாட்டில் உள்ளது. நடவடிக்கை எடுக்க வேண்டியது தானே. முதலமைச்சர் விஜய் என்ன செய்கிறார்? உலகத்திலேயே இறந்தவர்கள் வீட்டுக்குப் போகாமல் அவர்களை வரவைத்து ஆறுதல் சொன்னது இவர்கள் தான். இப்போது கரூர் போவதாக சொல்வது எல்லாம் இடைத்தேர்தலுக்கான நாடகம். கரூர் சம்பவம் நடந்து 278 நாளாகிறது. முதலமைச்சராகி 55 நாளா போகவில்லை. இப்ப இடைத்தேர்தல் வர இருப்பதால் அதற்காக கரூர் செல்கிறார்.

விஜய் காலதாமதமாக வந்ததால் தான் கூட்ட நெரிசல் ஏற்பட்டு 41 பேர் இறந்தனர் என்பது அங்குள்ள மக்களுக்கு நன்கு தெரியும். அதனால் தான் கரூரில் த.வெ.க. தோற்றது. இப்போது காவல்துறை மீது ஆதவ் அர்ஜூனா வைக்கும் காவல்துறை கொன்றது என்ற குற்றச்சாட்டுக்கு இதுவரை டி.ஜி.பி., உள்துறை செயலாளர் பதில் அளிக்கவில்லை. அவர்களின் விளக்கம் என்ன?

**சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது!**

வெறும் அவதூறுகளை மட்டுமே பேசி ஒரு ஆட்சி நடந்து கொண்டுள்ளது. தினம் தினம் பாலியல் வன்கொடுமை அதிகரித்து வருகிறது. சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு வருகிறது. நேற்று ஒரு 5 வயது சிறுவனையும் அவனது தந்தையையும் பட்டப் பகலில் தலையை வெட்டி கொன்றிருக்கிறார்கள். இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை எந்தப் பதிலும் இல்லை.

**தமிழ்நாட்டிற்கு ரூ.5,000 கோடி இழப்பு!**

ஆணவக்கொலை பற்றி பேசவில்லை, தி.மு.க. எதிர்த்து தீர்மானம் போட்ட ஒன்றிய அரசின் புதிய 100 நாள் வேலை திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனால் ரூ.5,000 கோடி இழப்பு நமக்கு ஏற்படும். இந்த அரசு தான் இப்படி என்றால் அதன் கூட்டணியில் இருக்கிறவர்களாவது பேசுகிறார்களா? ஒரு வார்த்தை கூட பேசவில்லை. முஸ்லீம்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கு ஆபத்து வருகிறது. அது பற்றி பேசவில்லை. கூட்டணியில் இருக்கும் முஸ்லிம் லீக்கும் பேசவில்லை. காங்கிரஸ் பற்றி யாராவது பேசினா தாங்க மாட்டீங்கனு டயலாக் பேசறாங்க. அண்ணா 1967-இல் அடித்த ஒரு அடியில் நாக் அவுட் ஆனவங்க .. நாங்க தான் காப்பாத்தி ஐசியு வில் வைத்து காப்பற்றி வந்தோம். இவர்கள் எங்களை பற்றி பேசலாமா.

கடந்த தி.மு.க. ஆட்சியில் கொண்டுவந்த நலத்திட்டங்கள் தான் இதுவரை நடைமுறையில் உள்ளன. த.வெ.க. கொடுத்த வாக்குறுதிகள் எதையும் முறையாக செயல்படுத்தவில்லை. மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கும் கட்சியாக தி.மு.க.தான் உள்ளது.

வர உள்ள இடைத்தேர்தலை திராணி இல்லாமல் தோல்வி பயத்தில், பதற்றத்தில் பொய் வழக்கு, அவதூறு செய்வது என இந்த அரசு இறங்கி உள்ளது.'

வெறுப்பு அரசியலையும், அவதூறு அரசியலையும் தமிழ்நாட்டில் செய்து வருகின்றனர். இவை அனைத்தையும் தி.மு.க. முறியடிக்கும். மக்கள் பிரச்சினைக்காக களத்தில் நின்று போராடும்.

இவ்வாறு சி.வி.எம்.பி. எழிலரசன் பேட்டியளித்தார்.

---

## 6 லட்சம் பேர் விண்ணப்பம் செய்து காத்திருக்கிறார்கள்

# புதிய ரேஷன் கார்டு எப்போது கிடைக்கும்..?

## தமிழகம் முழுவதும் பொதுமக்கள் எதிர்பார்ப்பு!

*சென்னை, ஜூலை 5-*

*தமிழகத்தில் புதிய ரேஷன் கார்டு விண்ணப்பம் செய்து சுமார் 6 லட்சம் பேர் காத்திருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 34,911 ரேஷன் கடைகள் மூலம் விலையில்லா அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில், மற்றும் துவரம் பருப்பு போன்ற அத்தியாவசிய பொருட்கள் வழங்கப் படுகின்றன. 2 கோடியே 28 லட்சத்து 41 ஆயிரத்து 335 குடும்ப அட்டைகள் தற்போது உள்ளன. இவற்றின் மூலம் சுமார் 7 கோடி பேர் பயன் அடைந்து வருகிறார்கள்.*

*ரேஷன் கார்டுகள் மூலமே அரசின் நலத்திட்டங்கள் வழங்கப்படுவதால் அதனை வாங்குவதில் தீவிரமாக உள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் 16ம் தேதி முதல் புதிய ரேஷன் கார்டு வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டது. தேர்தலுக்காக மார்ச் 31ம் தேதி வரை நிறுத்தி வைக்கப்பட்டது. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பின்னர் இன்னும் புதிய ரேஷன் கார்டு வழங்கப்படாமல் இருந்து வருகிறது. கடந்த 6 மாதமாக புதிய ரேஷன் கார்டு கிடைக்காமல் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகிறார்கள். மார்ச் மாதம் வரை சுமார் 3 லட்சம் புதிய ரேஷன் கார்டுகள் கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்கள். இதில் 21,000 மனுக்கள் தவிர மற்ற அனைத்து விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பரிசீலனையில் உள்ளன. ஏப்ரல், மே, ஜூன் ஆகிய 3 மாதங்களிலும் மேலும் சுமார் 3 லட்சம் விண்ணப்பங்கள் தமிழ்நாடு மின் ஆளுமை துறைக்கு வந்து உள்ளன.*

*இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது:*

*3 லட்சம் புதிய ரேஷன் கார்டுகள் அச்சடிக்கும் பணி நடந்து வருகிறது. ஏப்ரல், மே, ஜூன் ஆகிய 3 மாதங்களில் மேலும் 3 லட்சம் பேர் விண்ணப்பித்த படிவங்கள் இன்னும் செயல் பாட்டுக்கு வரவில்லை. புதிய ரேஷன் கார்டு வழங்குவது குறித்து 7 வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.*

*ஒரே எண் கொண்ட வீட்டில் ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்தால் புதிய கார்டு வழங்குவது சிரமம்.*

*இதனால் புதிய ரேஷன் கார்டுகள் குறித்த ஆய்வு விசாரணை முழுமையாக மேற்கொண்டு அதனை முறைப்படுத்தி னால் மட்டுமே அனுமதிக்கப்படும். அதனால் தாமதம் ஏற்படுகிறது என்றார்.*

*தேர்தலுக்காக நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில், தற்போது தேர்தல் முடிந்து புதிய ஆட்சி அமைந்து 2 மாதம் ஆன பிறகும் புதிய ரேஷன் கார்டு வழங்காததால் பொதுமக்கள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள்.*

---

## பா.ஜ.க. ஒழிக என முழக்கமிடுவது குற்றமல்ல –

# மும்பை உயர்நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

*மும்பை, ஜூலை 5-*

*பா.ஜ.க. ஒழிக, அமித்ஷா ஒழிக என அரசுக்கு எதிராக கோஷமிடுவது குற்றமல்ல என மும்பை உயர்நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.*

*மகாராஷ்டிர மாநிலத்தின் சோசியலிஸ்ட் டெமாக்ரடிக் பார்ட்டி ஆஃப் இந்தியா கட்சி மாநில பொதுச்செயலாளர் சயீத் அகமது அப்துல் வாஹித் சவுத்ரி, குடியுரிமை திருத்த சட்டம், பாபர் மசூதி இடிப்பு, எரிபொருள் விலை உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு எதிராக மும்பையின் செம்பூர் பகுதியில் போராட்டங்களை நடத்தினார். பா.ஜ.க. ஒழிக, அமித்ஷா ஒழிக போன்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதாக கூறி, 2025ம் ஆண்டு கைது செய்யப்பட்டார். 12 மாதங்கள் மும்பை மற்றும் புறநகர் எல்லைக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டது.*

*இதனை எதிர்த்து சயீத் அகமது மும்பை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி மாதவ் ஜாம்தார், சயீத் அகமது மீதான தடை உத்தரவை ரத்து செய்து தீர்ப்பளித்தார். மும்பை நகருக்குள் நுழைய தடை விதித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவையும் ரத்து செய்தார்.*

*ஒன்றிய அரசின் கொள்கைகளை எதிர்ப்பதும், அதற்கு எதிராக முழக்கமிடுவதும் குடிமக்களின் அரசியலமைப்புச் சட்டப்படியான அடிப்படை உரிமை, அதற்காக அவர்கள் மீது வழக்கு போடுவீர்களா? என காவல்துறைக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.*

---

### அந்தியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் முரசொலி முகவருமான

## ஏ.ஜி. வெங்கடாசலத்தின் தாயார் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



*ஈரோடு, ஜூலை 5-*

*ஈரோடு மாவட்டம் அந்தியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முரசொலி முதல்வருமான ஏ.ஜி. வெங்கடாசலத்தின் தாயார் குப்பாயம்மாள் அவர்கள் நேற்று (4.7.2026) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*தகவல் அறிந்ததும் அன்னாரின் உடலுக்கு கழகத்தினர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராசிபுரம் கே. இராமசாமி

**ஜூலை 5 (2000)**



**சேலம் மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், திராவிட இயக்கத்தின ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்தவர்.**

**இராசிபுரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் என இரு ஒன்றியங்களில் செயலாளராக இருந்தவர். பேரூர்க் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**இராசிபுரம் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி இயக்குனநராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு "மாநில சிறந்த கூட்டுறவாளர்" விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.**


**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி பார்வதி நாராயணசாமி

**ஜூலை 5 (2023)**



**தனது இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு கழக மகளிர் அணியில் பணியாற்றத் தொடங்கியவர்.**

**வடசென்னை மாவட்டம், ஆர்.கே.நகர் பகுதி மகளிர் அணி அமைப்பாளராக மூன்று முறையும், மாவட்ட மகளிர் அணி தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழக வளரப் பாடுபட்டவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**